# 33. கொல்லாமை

321. *அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்*
*பிறவினை எல்லாந் தரும்*

**கொலை செய்யாமல் இருப்பதே அறம் ! – உயிர்க்**
**கொலை செய்து விட்டால் பிற தீமைகளை**
**கொண்டு வந்து விடும் தானாக !**

322. *பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாந் தலை*

**பிற உயிர்க்குப் பகுத்துக் கொடுத்து**
**பின் தானும் உண்டு**
**பிற உயிர்களை வாழ்விப்பது**
**பின்பற்றும் நூலோர் தொகுத்த அறங்களில் முதன்மையானது !**

323. *ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று*

**"கொல்லாமையே" அறங்களில் நாம்**
**கொடுக்க வேண்டிய இடம் முதன்மையானது !**
**பின் தொடர்ந்து இரண்டாவதாக இடம்**
**பிடிப்பது "பொய்யாமையே" !**

324. *நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்*
*கொல்லாமை சூழும் நெறி*

**'நன்னெறி' எனப்படுவது யாதெனின்**
**நல்லவழி காட்டும் நீதி நூல்கள்**
**நவிலும் எவ்வுயிரையும் கொல்லாமையே !**

325. *நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்*
*கொல்லாமை சூழ்வான் தலை*

**பிறவியில் வரும் துன்பங்களுக்குப்**
**பிடி கொடுக்க அஞ்சித் துறவியாவதை விட**
**இல்லறத்திலேயே இருந்து கொண்டு**
**இன்ன பிற உயிர்களைக் கொல்லாமையே சிறந்தது !**

*326.* *கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்*
*செல்லா துயிருண்ணுங் கூற்று*

**கொல்லாமை எனும் சிறந்த அறத்தைக்**
**கொண்டு வாழ்பவனை**
**உலகத்து உயிர்களை எல்லாம்**
**உண்ணும் காலனும் நெருங்கிட வாய்ப்பில்லை !**

*327.* *தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி*
*தின்னுயிர் நீக்கும் வினை*

**தன்னுயிருக்கே ஆபத்து என்றாலும் அதைத்**
**தடுக்க இன்னொரு உயிரை**
**தயங்காமல் எடுக்கும் தீய செயல் வேண்டாம் !**

*328.* *நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்*
*கொன்றாகும் ஆக்கங் கடை*

**கொட்டும் பயன்களைக்**
**"கொலை" பெரிதாகத் தந்திடினும் – அறத்தைக்**
**கொண்டாடும் சான்றோர்கள் – அதன்படி**
**கொடுப்பதை இழிவாகவே கருதுவார்கள் !**

*329.* *கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்*
*புன்மை தெரிவா ரகத்து*

**கொலை செய்தலின் இழிவை அறிவு**
**கொண்டு ஆராய்வதால் – உயிரைக்**
**கொலை செய்யும் மிக இழிவானக் –**
**கொடுஞ் செயல் புரிபவர் "புலையரே" !**

*330.* *உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்*
*செல்லாத்தீ வாழ்க்கை யவர்*

**ஓர் "உயிரை" உடம்பு எனும்**
**ஓட்டிலிருந்து முற்பிறவியில் நீக்கியவர்**
**ஓயாத நோயும் வறுமை மிகுந்த இழி வாழ்வும் உடையவர் ஆவர் !**